வரலாற்றில் புதிய அமைப்புக்கள் தோல்விகளிலிருந்தே தோற்றம்கொள்கின்றன.

வரலாற்றில் புதிய அமைப்புக்கள் தோற்றம் பெறுவதும், அவ்வாறு தோற்றம் பெறும் அமைப்புக்கள் காலவோட்டத்தில் நிலைக்க முடியாமல் சிதைந்து போவதும் அரசியல், சமூக இயங்குநிலையில் தவிர்க்க முடியாதவையாகும். நமது ஈழ அரசியல் வரலாற்றில் பல கட்சிகள் உருவாகியிருக்கின்றன - பல இயக்கங்கள் தோற்றம்பெற்றிருக்கின்றன □ அதே போன்று, காலத்திற்கு காலம் பல அமைப்புக்கள் முகம் காட்டியிருக்கின்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற கட்சிகள், இயக்கங்கள், அமைப்புக்களில் சிலது நிலைக்க, பலதோ, காலவோட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் சிதைவுற்றிருக்கின்றன.

அரசியல் சூழ்நிலைகள் மாறுகின்றபோது, குறிப்பிட்ட சூழ்நிலையின் சவால்களை எதிர்கொள்ள முடியாத அமைப்புக்கள் சிதைவடைவது வரலாற்றில் தவிர்க்க முடியாதது. சூழ்நிலைகளே ஒரு ஸ்தாபனத்தின் தேவையை இல்லாமலாக்குகின்றது □ அதே சூழ்நிலைதான், புதிய அமைப்புக்களின் தேவையையும் நிர்பந்திக்கின்றது □ இந்த யதார்த்தத்தை நாம் புறம்தள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் வரலாற்றில் பின்தங்கியவர்களாகவே இருப்போம்.

ஈழப் போர் முடிவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. இந்த பதினைந்து வருடங்களில் நாம் எதிர்பார்த்த விடயங்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்தவொரு முன்னேற்றத்தையும் எங்களால் நிரூபிக்க முடியவில்லை. பலர் அமைப்புக்களாகவும், குழுக்களாகவும், தனிநபர்களாகவும் பலவாறான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர் என்பது உண்மைதான் ஆனாலும் நாம் தொடர்ந்தும் பின்னடைவுகளையே சந்தித்துவருகின்றோம். பதினைந்து வருடங்களில் தாயக அரசியல் சூழலும் மாறிவிட்டது. நடந்து முடிந்த சிறிலங்காவின் பொதுத் தேர்தலில் வடக்கில் தமிழ்த் தேசிய கட்சிகள் பின்னடைவை சந்தித்திருப்பதானது, தாயக மக்கள் தொடர்ந்தும் செயலற்ற தமிழ்த் தேசிய அரசியலின் பக்கமாக அணிதிரள்வதற்குத் தாயாரில்லை என்னும் செய்தியையே வெளிப்படுத்திநிற்கின்றது. இது நம் அனைவருக்குமான சிகப்பு எச்சரிக்கையாகும்.

முள்ளியாவாய்க்காலுக்கு பின்னரான அரசியல் சூழலில் தமிழ் புலம்பெயர் சமூகம்தான், தாயகத்திற்கான அரசியல் பின்தளமாக விளங்கியது. ஆனால் நடைமுறையில் தமிழ் புலம்பெயர் சமூகம் உண்மையிலேயே ஒரு அரசியல் பின்தளமாகத் தொழிற்படுகின்றதா என்னும் கேள்வியை, நாம் நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் ஆரம்பத்தில் புலம்பெயர் சமூகம் தொடர்பில் தாயகத்தில் காணப்பட்ட நம்பிக்கை தற்போது இருப்பதாகக் கூற முடியாது. நிலைமைகள் வேகமாக மாறிவருகின்றன. பதினைந்து வருடகால ஏமாற்றங்களே இதற்கான பிரதான காரணமாகும்.

ஒரு இனப்படுகொலைக்கு ஆளான மக்கள் கூட்டத்தை பிரதிநித்துவம் செய்யும் புலம்பெயர் சமூகம் என்னும் வகையில், நாம் கடந்த பதினைந்து வருடங்களாக எமக்கான நீதியை கோரிவருகின்றோம். ஆனால் இன்றைய உலக அரசியல் ஒழுங்கில் நாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதற்காகவே நீதியை பெற்றுவிட முடியாது. புவிசார் அரசியல் நலன்களுக்கு கட்டுப்பட்டிருக்கும் உலக அரசியல் சுழற்சியில் நீதி இலகுவாக கிடைத்துவிடும் என்று நம்பினால், நாம்தான் தவறாக சிந்திக்கின்றோம் என்று பொருளாகும்.

கடந்த பதினைந்து வருட கால அனுபவங்கள் இதனைத்தான், நமக்கு தெளிவாக உணர்த்தியிருக்கின்றன. எனவே நமது பயணம் என்பது பல தலைமுறைகளை இணைக்கும் அஞ்சல் ஓட்டம் போன்றது. இந்தத் தலைமுறையின் பயணத்தை நாம் தூரநோக்குடனும் அறிவுபூர்வமாகவும் மேற்கொண்டால்தான், தாயகமும் புலம்பெயர் சமூகமும் ஒரு நேர்கோட்டில் பயணிக்க முடியும். தாயக மக்கள் புலம்பெயர் சமூகத்தின் மீதான நம்பிக்கையை கைவிடுவார்களாயின், அதன் பின்னர் நாம் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் அவற்றுக்கு எவ்வித பயனும் இருக்கப்போவதில்லை.

தாயகம்தான் நமது அஸ்திபாரம். இந்த புரிதலிருந்தே நமது ஒவ்வொரு விடயங்களையும் திட்டமிட வேண்டும், முன்னெக்க வேண்டும். அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில், தாயகத்தின்

மேம்பாட்டுக்காக அனைத்து வழிகளிலும் நாம் செயலாற்ற வேண்டும். நீதிக்கான எமது பயணத்தை முன்னெடுக்கும் அதே வேளை, சமூக, பொருளாதார முன்னேற்றங்களை கருத்தில்கொண்டு, தாயகத்தின், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், நலிவுற்ற சமூகப் பிரிவினர் என அனைத்து தரப்பினரதும் மேம்பாட்டை கருத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தேசியம் என்பதை செயற்பாட்டு தளத்தின் ஊடாக முன்னெடுக்கும் உபாயங்கள் தொடர்பில்தான் நாம் கவனம் கொள்ள வேண்டும். அதே வேளை, ஐரோப்பிய நாடுகளில் வேர்கொண்டிருக்கும் நாம், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க மைய, சர்வதேச முகவர் அமைப்புக்கள், உலகளாவிய சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பையும், அதற்கான புலமைத்துவ ஆற்றலையும் கொண்டிருக்கின்றோம் ஆனால் அவற்றை நாம் முறையாக கையாண்டிருக்கின்றோமா என்னும் கேள்விக்கு பதில் தேட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கடந்த பதினைந்து வருடகால அனுபவஙகளை உற்றுநோக்கினால், எமது செயற்பாடுகள் அதிகம் எமக்குள் உரையாடுவதாகவே மட்டுப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டும். புலம்பெயர் சமூகத்திடம் பல ஆற்றல்கள் இருக்கின்றன. ஒரு அரசிற்குரிய வாய்ப்புக்கள் எமக்கு இல்லாவிட்டாலும் கூட, மேற்குலக தாராளவாத ஜனநாயக செல்நெறிக்குள் அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த வாய்ப்புக்களை நாம் முறையாக பயன்படுத்தினால், சிறிலங்கா அரசும் எங்களை நோக்கி வரக் கூடிய சூழலை ஏற்படுத்த முடியும்.

தாயகத்துடன் தடையற்ற வகையில் ஊடாடக் கூடிய ஆற்றலுடன் நாம் இருக்க வேண்டிய கட்டாயமானதாகும். தாயகத்திலுள்ள அரசியலாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், புத்திஜீவிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றோடு தடைகளற்ற வகையில், இணைந்து பணியாற்றக் கூடிய சூழலை நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும். அவ்வாறானதொரு அமைப்புசார் செயற்பாடு எங்களுக்கு கட்டாயம் தேவை. ஏனெனில், தாயகத்திற்கும் புலம்பெயர் சூழலுக்குள் இடையிலான செயற்பாட்டுரீதியான தொடர்புகள்தான் நமது இயங்குநிலைக்கான அஸ்திபாரமாகும். அந்த அஸ்திபாரத்தை பேணிப்பாதுகாத்தால்தான், தாயகம் நம்முடன் நம்பிக்கைமிக்க உறவில் நீடிக்கும். இந்த உறவில் தொய்வுநிலை ஏற்பட்டால் அதன் பின்னர் புலம்பெயர் செயற்பாடுகளுக்குப் பெறுமதியில்லாது போய்விடும்.

கடந்த பதினைந்து வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு விடயங்களை ஆராய்ந்ததன் அடிப்படையிலும் - அதே வேளை, தனிப்பட்டரீதியில் தாயகத்திலும் புலத்திலும் எங்களுக்குள்ள செயற்பாட்டுத் தொடர்புகளின் விளைவாகவுமே இந்த விடயங்களை உங்கள் முன்வைக்கின்றேன்.

இங்கு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் கடின உழைப்பால் மட்டுமே சாத்தியப்படும். அதே வேளை புலம்பெயர் சூழலிலுள்ள பல்வேறு துறைசார் நிபுனர்கள், செயற்பாட்டாளர்கள், அரசியலாளர்கள் அனைவரும் ஒன்றிணையும் போதுதான் நாம் குறிப்பிடும் இலக்கு நோக்கிப் பயணிக்க முடியும். இந்தப் புதிய அமைப்பானது, அவ்வாறானதொரு பயணத்தை நோக்கிச் செல்வதற்கான ஒரு முதல் நகர்வாகும். சிறுதுளி பெரு வெள்ளம் என்பது போல், இந்த புதிய அமைப்பின் இலக்குடன் தாயகத்தின் மீட்சிக்கான அர்ப்பணிப்புள்ளவர்கள் அனைவரும் கரம் கோர்க்கும் போது, எங்கள் எண்ணம் நிச்சயம் ஈடேறும்.

நாம் தொடர்ந்தும் முயற்சிப்போம். விழ, விழ முயற்சிப்போம். நமது தேச விடுதலைக்காக, தங்களை ஆகுதியாக்கியவர்களின் தியாகம் எங்களுக்கு பக்கபலமாக இருக்கும்.

நிமால் விநாயகமூர்த்தி
தலைவர் இடைகால நிர்வாகசபை
அனைத்துலகத் தமிழர் பேரவை
டிசம்பர் 8, 2024